# சிலப்பதிகார வரிக்கூத்து – நாட்டியசாஸ்திரிய அஷ்டநாயகி ஓர் ஒப்பீடு

**து. பத்மபிரி யா**
முனைவர் பட்டஆய்வாளர், நிகழ்கலைத்துறை
பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், புதுச்சேரி

**முனைவர் மு. சுப்பையா**
உதவிப் பேராசிரியர், நிகழ்கலைத்துறை
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

மலர்: 4
இதழ்: 1
மாதம்: ஜூலை
வருடம்: 2019
ISSN: 2454-3993

**முன்னுரை**

தமிழரின் பண்பாட்டோடும் வாழ்வியலோடும் தொடர்புடைய இலக்கியங்கள், உணர்வுகளின் வெளிப்பாடாக அமைந்து மக்களை ஒருங்கிணைக்கும் ஆற்றல் படைத்தன. காலத்தையும் இடத்தையும் கடந்து நின்ற கலைப்படைப்பாக விளங்கும் சிலப்பதிகாரம் இன்றைய வாழ்வோடும் உணர்வோடும் பின்னிப்பிணைந்து காணப்படும் இயல்புடையது. பிறமொழி மற்றும் பண்பாட் டுத் தாக்கத்தின் காரணமாக விளங்கும் ஆடற்கலை, வடமொழியினர்க்கே உரியதாக எண்ணப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையைப் போக்க சிலப்பதிகார வரிக்கூத்தில் காணப்படும் ஆடல் குறித்த கருத்துக்களும், நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்ட நாயகிகள் குறித்த கருத்து க்களும் ஒப்பீடு செய்யப்பட்டு, ஆடற்கலை தமிழர்க்கே உரியகலையாக விளங்கியது என்பதை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

இயல், இசை, நாடகம் என்ற மூன்று கூறுகளைக் கொண்ட முத்தமிழ் காப்பியமாகிய சிலப்பதிகாரம் முப்பது காதைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.அவற்றில் எட்டாவது காதையான வேனிற் காதையில் வரிக்கூத்து இடம்பெற்றுள்ளது.

வரிஎன்பதற்கு"அவரவர் பிறந்தநிலத்தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையும் தோன்ற நடித்தல்" (சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், உ.வே. சாமிநாதையர், ப.எண்.235) என சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை விளக்கம் கூறுகிறது. அதாவது தொழில், நிலத்தன்மை தோன்ற காமம் புனைந்த நடிப்பிசைப் பாட்டாகக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணை வாழ்வியல் உணர்வுகள், வரிக்கூத்தின் மூலம் நடித்துக் காட்டப்படுகின்றன எனலாம். சிலப்பதிகார வேனிற்காதை, கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள் வரி என எண் வகை வரிக்கூத்துகளைக் கூறுகிறது. தன்னைவிட்டுக் கோவலன் பிரிந்ததைப் பொறுத்துக்கொள்ள முடியாத மாதவி, வசந்த மாலையிடம் கடிதம் கொடுத்து அனுப்பியபோது கோவலன் மாதவி முன்பு ஆடிய எட்டுவகை வரிக் கூத்துக்களை நினைத்துப் பார்த்து அக்கடிதத்தை வாங்க மறுக்கிறான். இச்சூழலில் எண்வகை வரிக்கூத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இக்காலகட்டத்தில் ஆடலுக்கான விதிமுறைகளைப் பயன்படுத்தப்படும் வடமொழிநூல்களில்ஒன்றானபரதரின்நாட்டிய சாஸ்திரம் நாடகக்கலை, நாட்டியக்கலை, இசைக்கலை ஆகியவற்றைப் பற்றி மிகவும் நுணுக்கமாக குறிப்பிட்டுள்ளது. இந்நூல் முப்பத்தாறு அத்தியாயங்களையும் ஆறாயிரம் சுலோகங்களையும் கொண்டுள்ளது. நாட்டிய சாஸ்திரத்தில் இருபத்து நான்காவது அத்தியாயத்தில் அஷ்ட நாயகிகள் குறித்த கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றின் மூலம் நாயகனிடம் தொடர்பு கொண்ட நாயகியின் உணர்வுகள் எவ்வகைத் தன்மைகளைக் கொண்டன என்பதை அறியமுடிகிறது. அஷ்ட நாயகிகள், அவர்களின் இயல்புகளைக் கொண்டு ஸ்வாதீனபதிகா, வாஸகஸஜ்ஜிகா, விரஹோத் கண்டிதா, கண்டிதா, கலஹான்தரிதா, விப்ரலப்தா, ப்ரோஷிதபர் த்ருகா, அபிஸாரிகா என எட்டுவகையாகப் பிரிக்கப்படுவர். இந்த அஷ்டநாயகிகளில் வரும் அபிஸாரிகா நாயகியைத் தவிர ஏனைய ஏழு நாயகிகளின் உணர்வுகளும் சிலப்பதிகார வரிக்கூத்தில் காணப்பெறும் தலைவியின் உணர்வுகளோடு ஒத்துக்காணப்படுகின்றன.

### 1. கண்கூடுவரி

**"மாதர் வாண்முகத்துமதை இயநோக்க மொடு**
**காதலிற் றோன்றியகண்கூடு வரியும்"**
***(சிலப்பதிகாரவேனிற்காதை 76-77)***

காமக் குறிப்புகள் கூடியமதர்த்த நோக்கத்தோடு காதலுடையவள் போல் தோன்றி, தானே வந்து நிற்கும் நிலை (காட்சிபிரியதரிசனம்) கண்கூடுவரி.

இத்தலைவியின் நிலையை, நாட்டிய சாஸ்திரத்தில் காணப்படும் ஸ்வாதீனபதிகா நாயகியின் உணர்வுகளோடு ஒப்பிடலாம். கலவியில் விருப்பம் மிகுந்து, தலைவன் தன் பக்கத்தில் இருக்க, மிக்க மகிழ்ச்சியும், அபிமானமும், பொலிவும் கொண்டிருப்பவள் ஸ்வாதீனபதிகா என்பவளாவாள். இந்த நாயகி தன் நாயகனுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவள். தன் நாயகன் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவள். தன் அதிர்ஷடத்தை எண்ணி மிகவும் கர்வம் கொண்டவள்.

### 2. காண்வரி

**"வருகென வந்து போகெனப் போகிய**
**கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமும்"**
***(சிலப்பதிகாரவேனிற்காதை 82-83)***

தலைவன் வருக என்றால் வருதலும், போக என்றால் போதலும் செய்து மனமகிழ்வுத் தந்துநீங்கும் தலைவியின் நிலை காண்வரி.

இந்தத் தலைவியின் நிலை நாட்டிய சாஸ்திரம் கூறும் வாஸகஸஜ்ஜிகா நாயகியின் உணர்வுகளோடு தொடர் புடையதாகக் காணப்படுகிறது. நாயகன் தன்னுடன் கூடி மகிழ,மகிழ்ச்சியுடன் தன்னை அணிசெய்து கொண்டு நாயகன் வருகைக்காக காத்திருப்பவள்.

**3. உள்வரி**

**"செருவேல் நெடுங்கண் சிலதியர் கோலத்து ஒருதனி வந்தஉள்வரி யாடலும்"**

**(சிலப்பதிகாரவேனிற்காதை 88-89)**

வேற்றுருக் கொண்டு நிற்கும் நிலை. அதாவது தோழியர் (சிலதியர்) கோலத்தைக் கொண்டு, தான் தனியே வந்துநின்று நடித்தநிலை உள்வரி,.

இத்தலைவி, நாட்டிய சாஸ்திரம் கூறும் விப்ரலப்தா நாயகியின் உணர்வுகளோடு ஒத்துக் காணப்படுகிறாள். சகியை அனுப்பிக் குறிப்பிட்ட இடத்திற்கு நாயகியை வரச்சொன்ன நாயகன், வேறு ஏதேனும் காரணத்தினால் வரத்தவறிய போது அவனால் ஏமாற்றம் செய்யப்பட்ட நாயகி விப்ரலப்தா எனப்படுவாள்.

**4. புறவரி**

**"திறத்து வேறாயவென் சிறுமை நோக்கியும் புறத்துநின் றாடியபுன்புற வரியும்"**

**(சிலப்பதிகார வேனிற்காதை 92-93)**

களவுப் புணர்ச்சியில் தலைவன் கையில் படாது, தலைவனுடன் அணையாது புறத்துநின்று விளையாடி விடைபெறும் நிலை புறவரி.

இத்தலைவியின் நிலை, நாட்டிய சாஸ்திரத்தில் வரும் விரஹோத் கண்டிதா நாயகியை ஒத்துக் காணப்படுகிறது. வேறு ஒரு பெண்ணின் மீது கொண்ட விருப்பத்தால், தன்னைப் பிரிந்த நாயகனை எண்ணி மிகவும் வருந்தும் நாயகி விரஹோத் கண்டிதா ஆவாள்.

இந்த நாயகி குளிர்ந்த நிலவொளி, அலங்காரம், உணவு, சந்தனம் போன்றவற்றில் வெறுப்பு கொண்டவள். மகிழ்வு தரும் விசயங்களில் நாட்டம் இல்லாதவள். இவள் தனிமையை அதிகமாக விரும்புபவள்.

**5. கிளர் வரி**

**"தளர்ந்தசாயல் தகைமென் கூந்தல் கிளர்ந்து வேறாகிய கிளர் வரிக்கோலமும்"**

**(சிலப்பதிகார வேனிற்காதை 100-101)**

தன்னை விரும்பும் தலைவனை மொழிய (பேச) வைத்து ஊடாடும் தலைவியின் புலவிநிலை கிளர்வரி.

இந்தத் தலைவியின் நிலையை, நாட்டிய சாஸ்திரம் கூறும் கண்டிதா நாயகியின் வெளிப்பாட்டோடு ஒப்பிடலாம். தன்னுடன் இணைந்திருக்க வேண்டிய நாயகன் வேறொரு நாயகியுடன் கூடியிருந்து தன்னிடம் வராதபோது, தன்னை ஏமாற்றியதால் அவன்மீது கோபம் கொண்டு மிகக் கடுமையான வார்த்தைகளால் அவனைக் கண்டிப்பவள் கண்டிதா ஆவாள்.

**6. தேர்ச்சிவரி**

**"என்னுறு கிளைகட் குத் தன்னுறு துயரம் தேர்ந்துதேர்ந் துரைத்த தேர்ச்சிவரியன்றியும்"**

**(சிலப்பதிகாரவேனிற்காதை 103-104)**

பரத்தை வயப்பட்டதன் தலைவனின் இடர்பாடுகளையும், தான் அத்தலைவன் மீது வைத்திருக்கும் உயிரினும் மேலான பாசப் பிடிப்பு உணர்வுகளையும் பிறரிடத்து உரைத்துத் தேற்றிக்கொள்ளும் நிலை தேர்ச்சிவரி.

இத்தலைவியின் நிலையை, நாட்டிய சாஸ்திரத்தில் காணப்படும் கலஹான்தரிதா நாயகியின் வெளிப்பாட்டோடு ஒப்பிடலாம். நாயகி கோபத்தால் தன்னுடைய நாயகனிடம் சண்டையிட்டுப் பிரிந்து இருக்கும்வேளையில், கோபம் மற்றும் வெறுப்பின் காரணமாகத்தான்

நாயகனிடம் கடுமையாக நடந்துகொண்டதை எண்ணி வருந்துபவள் கலஹான்தரிதா ஆவாள்.

**7. காட்சிவரி**

**"வண்டலர் கோதை மாலையுள் மயங்கிக்**
**கண்டவர்க் குரைத்த காட்சி வரியும்"**
***(சிலப்பதிகாரவேனிற்காதை 105-106)***

தலைவி தன் வருத்தத்தைப் பலரும் காணும்படி நடிக்கும் நிலை காட்சிவரி.

இத்தலைவியின் நிலையை நாட்டிய சாஸ்திரம் கூறும் ப்ரோசி பர்த்ருகா நாயகியின் வெளிப்பாட்டோடு ஒப்பிடலாம். வேறு முக்கிய காரணத்தினால் நாயகன் தன்னைப் பிரிந்து வேறுநாட்டில் இருக்கும்போது தன்னை அழகுப்படுத்திக் கொள்ளாமல் இருப்பவள் ப்ரோஷசி தபர்த்ருகா ஆவாள். ஒருநாளில் நாயகன் நிச்சயமாக திரும்பி வருவான் என்று தெரிந்தும் அவன் பிரிவால் வாடுபவள். நோன்பு, விரதம் போன்றவற்றை நாயகனின் நலனுக்காக நோற்பவள்.

**8. எடுத்துக்கோள்வரி**

**"அடுத்தடுத்தவர் முன் மயங்கிய மயக்கம்**
**எடுத்தவர் தீர்த்த வெடுத்துக்கோள் வரியும்"**
***(சிலப்பதிகாரவேனிற்காதை 107-108)***

கையறு நிலையில் தலைவி துயரத்தில் மயங்கி வீழ்ந்தவளாகப் பிறர் தன்னை அணைத்தெடுத்துத் துயர் தீர்க்க நடிக்கும் நிலை எடுத்துக் கோள்வரி.

இத்தலைவியும் நாட்டிய சாஸ்திரத்தில் உள்ள கலஹான்தரிதா நாயகியின் வெளிப்பாடாவாள்.

வரிக்கூத்தில் உள்ள தேர்ச்சிவரி மற்றும் எடுத்துக் கோள்வரி எனப்படும் இரு தலைவிகளின் நிலையும் அஷ்ட நாயகிகளில் வரும் கலஹான்தரிதா நாயகியின் வெளிப்பாட்டையே ஒத்துக் காணப்படுகிறது. மேலும் அஷ்டவித நாயகிகளில் நாயகன் இருக்கும் இடத்திற்கு நாயகனைத் தானே தேடிச் செல்லும் அபிஸாரிகா எனப்படும் நாயகி வரிக்கூத்தில் உள்ள எண்வகைத் தலைவிகளில் எந்த ஒரு தலைவியின் நிலையையும் ஒத்துக் காணப்படாததால் இங்குக் குறிப்பிடப்படவில்லை. எனவே அஷ்டநாயகிகளில் உள்ளமற்ற ஏழு நாயகிகளை மட்டுமே வரிக்கூத்தில் உள்ள எண்வகைத் தலைவிகளின் நிலையோடு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது.

**ஆடற்கலையும் அவிநயமும்**

ஆடற்கலைஞர் ஆடலுக்கான பாடல் அல்லது கதையின் பொருளைப் பார்ப்போர்க்கு விளங்கவைக்கத் தம் உடலின் உறுப்புகளால் மேற்கொள்ளும் முயற்சிகளின் தொகுப்பே அவிநயம் என அரும்பதவுரையாசிரியர் மற்றும் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுவர். உடல் உறுப்புகளால் காட்டப்படும் அவிநயம் என்றால் குறிப்பாக கைகளினால் காட்டப்பெறும் அவிநயங்கள் பல்வேறு பாவகங்களைக் கொண்டு சுவையை வெளிப்படுத்தும் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. ஆகவே சுவையைத் தோற்றுவிப்பவை பாவகங்களே ஆகும். பாவகங்களை வெளிப்படுத்தும் போது சுவை தோன்றும். எனவே சுவையும் பாவகமும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகும். இதனைச் சுவை பாவகம் என்றும் கூறுவர். நாட்டிய சாஸ்திரம் ரசபாவம் என்று குறிப்பிடுகிறது.

தலைவனின் மீது கொண்ட விருப்பத்தால் எண்வகைத் தலைவிகளிடம் சுவை தோன்றுகின்றது. இச்சுவையைத் தோற்றுவிக்கத் தலைவி மேற்கொள்ளும் செய்கைகள் (அவிநயங்கள்) பாவகங்கள் எனப்படும். இவ்வாறு சுவையும் பாவகங்களும் பல்வேறு அவிநயங்களால் இந்த எண்வகைத் தலைவிகளிடம் தோன்றும் இதனின்று ஆடலில் முக்கிய பங்கினை வகிக்கும் அவிநயம்

குறித்த செய்திகளைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுவதைச் சிறப்புடையதாகக் கருதலாம்.

## முடிவுரை

சிலப்பதிகாரம் காட்டும் எண்வகை வரிக்கூத்தில் உள்ள தலைவிகளின் நிலைகள் பெரும்பாலும் நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் அஷ்டநாயகிகளின் உணர்வுகளோடு ஒத்திருப்பதைக் காணமுடிகிறது. எண்வகை வரிக்கூத்தாடிய ஆடல் நங்கை மாதவி எனக் கோவலன் என்ற பாத்திரத்தின் வழி கூறப்படும் சிலப்பதிகாரம், நாட்டிய சாஸ்திரத்தைக் காட்டிலும் காலத்தால் முற்பட்டது. மேலும் சிலப்பதிகாரம் கதை நிகழ்வுகளோடு இந்த ஆடல் உணர்வுகளைச் சித்தரித்திருப்பது படைப்பு நிலையில் சிறப்புடையதாகக் கருதத்தக்கது. ஆனால் நாட்டிய சாஸ்திரமோ ஆடலில் வரும் நாயகியின் நிலைகளாகக் குறிப்பிடுகிறது. இவற்றைக் கருத்தில்கொண்டு நோக்கும் போது ஆடற்கலை தமிழர்க்கே உரிய வாழ்வியல் கலையாக இருந்துள்ளதை அறியமுடிகிறது.